Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.304/2020 Date:12.02.2026
Deposition of witness for prosecution: PW5 ( LW15)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | சுந்தரராமன் | Village | உத்தமபாளையம் |
| Father/ Husband Name | நாராயணன் | Taluk | உத்தமபாளையம் |
| Age | 50 /2026 | Calling | மோட்டார் வாகன ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 12.02.2026 TIME 05.55 **PM**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :–**

நான் தற்போது உத்தமபாளையம் வட்டார கோட்டா வாகன ஆய்வளர் நிலை–II ஆக பணிபுரிந்து வருகிறேன். வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனங்கள் ஆய்வு செய்து, வாகன ஆய்வு அறிக்கை அளித்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. அருண்குமார் அவர்கள் பணிமாறுதலாகி சென்றுவிட்டதாலும், அவரது கையொப்பம் எனக்கு நன்கு பரீட்சியம் என்பதாலும் ஆவணங்களை பார்த்து என்னால் சாட்சியம் அளிக்க இயலும். கடந்த 04.02.2020 ம் தேதி 14.40 மணிக்கு திரு. அருண்குமார் அவர்கள் பணியில் இருந்த போது கம்பம் வடக்கு காவல்நிலைய குற்ற எண் 18/20 இதச பிரிவு 279,337,304(A) வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனமான TN 59 BJ 5799 Yamaha இருசக்கர வாகனத்தை ஆய்வு செய்து அறிக்கை தரவேண்டி வரப்பெற்ற வேண்டுகோள் கடிதத்தை பெற்று 04.02.2020 ம் தேதி அலுவலகத்தில் வைத்து மேற்படி வாகனங்களை ஆய்வு செய்து, வாகனத்தின் சேதத்தையும், நிலையையும் குறிப்பு எடுத்து மேற்படி விபத்தானது இயந்தி கோளாரினால் ஏற்படவில்லை என அறிக்கை வழங்கினார். மோட்டர் வாகன ஆய்வு அறிக்கை **அ.சா.ஆ.3** ஆகும்.

கடந்த 04.02.2020 ம் தேதி 14.45 மணிக்கு திரு. அருண்குமார் அவர்கள் பணியில் இருந்த போது கம்பம் வடக்கு காவல்நிலைய குற்ற எண் 18/20 இதச பிரிவு 279,337,304(A) வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனமான TN 60 AY 0965 Hero Passion Pro இருசக்கர வாகனத்தை ஆய்வு செய்து அறிக்கை தரவேண்டி வரப்பெற்ற வேண்டுகோள் கடிதத்தை பெற்று 04.02.2020 ம் தேதி அலுவலகத்தில் வைத்து மேற்படி வாகனங்களை ஆய்வு செய்து, வாகனத்தின் சேதத்தையும், நிலையையும் குறிப்பு எடுத்து மேற்படி விபத்தானது இயந்தி கோளாரினால் ஏற்படவில்லை என அறிக்கை வழங்கினார். மோட்டர் வாகன ஆய்வு அறிக்கை **அ.சா.ஆ.4** ஆகும். காவல் ஆய்வாளர் விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்தில் ஈடுபட்ட இருவாகனங்களும் இரண்டு நபர்கள் மட்டும் பயணிக்கக்கூடிய வாகனம் என்றால் சரிதான். இந்த வழக்கில் விபத்து இடம்

பார்வையிட்டு ஆய்வறிக்கை தயார் செய்யப்பட்டதா என்றால் இல்லை. TN 59 BJ 5799 Yamaha என்ற இருசக்கர வாகனத்திற்கு மற்றொரு இருசக்கர வாகனத்தை விட சேதாரம் குறைவாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சேதாரங்கள் சாதரணமாக வாகனங்கள் கீழே விழுந்தால் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். TN 60 AY 0965 Hero Passion Pro இருசக்கர வாகனத்தின் ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சேதாரங்கள் நான்கு சக்கர பெரிய வாகனங்கள் மோதினால் தான் ஏற்படும் என்றால் அவ்வாறு அறுதியிட்டு கூறுயியலாது. TN 60 AY 0965 Hero Passion Pro இருசக்கர வாகனத்தின் Insurance சமர்ப்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். TN 59 BJ 5799 Yamaha என்ற இருசக்கர வாகனத்தின் ஓட்டுநருக்கு ஆய்வின் போது ஓட்டுநர் உரிமம் சமர்ப்பிக்கப்படவில்லை என்றால் சரிதான், அவ்வாறு சமர்ப்பிக்கப்படாததால் ஓட்டுநர் உரிமம் இல்லை என அறுதியிட்டு கூறுயியலாது என்றால் சரிதான்.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd/P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.